# ஆண்டு இறுதித்தேர்வு – 2025

## தமிழ்

**வகுப்பு – 8 மதிப்பெண்கள் : 100 காலம் : 2:30 மணி**

**I. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. (15 x 1=15)**

கொடுக்கப்பட்ட நான்கு விடைகளுள் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. பறவைகள் பறந்து செல்கின்றன.

அ) நிலத்தில் ஆ) விசும்பில்

இ) மரத்தில் ஈ) நீரில்

2. இந்தியா, விஜயா முதலான இதழ்களை நடத்தி விடுதலைப் போருக்கு வித்திட்டவர் யார்?

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கவிமணி ஈ) சுரதா

3. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் யார்?

அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார் இ) வ.உ.சிதம்பரனார்

ஈ) பெருஞ்சித்திரனார்

4. வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் எது?

அ) தலை ஆ) மார்பு

இ) மூக்கு ஈ) கழுத்து

5. ‘நீளுழைப்பு’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _.

அ) நீளு + உழைப்பு ஆ) நீண் + உழைப்பு இ) நீள் + அழைப்பு

ஈ) நீள் + உழைப்பு

6. திருக்குறளில் விடுபட்ட சீர்களுள் சரியானவற்றைத் தேர்வு செய்க. சமன்செய்து கோல்போல் அமைந்தொருபால் _சான்றோர்க் கணி.

அ) கோடாமை, சீர்தூக்கும் ஆ) சீர்தூக்கும், கோடாமை

இ) அமைந்தொருபால், கோடாமை ஈ) கோடாமை, சமன் செய்து

7. அமர்ந்தாள்- இச்சொல்லுக்கான வேர்ச்சொல்லைத் தேர்க.

அ) அமர்ந்து ஆ) அமர்

இ) அமர்க ஈ) அமர்ந்த

8. கற்றவருக்கு அழகு தருவது _.

அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் ஈ) கல்வி

Padasalai.Net

9.உடனிகழ்ச்சிப் பொருளில் வேற்றுமை வரும்.
அ) மூன்றாம் ஆ) நான்காம்

இ) ஐந்ததாம் ஈ) ஆறாம்

10. பசியால் வாடும் உணவளித்தல் நமது கடமை.

அ) பிரிந்தவர்க்கு ஆ) அலந்தவர்க்கு இ) சிறந்தவர்க்கு

ஈ) உயர்ந்தவருக்கு

11. புணர்ச்சியில் ஒரெழுத்து வேறு எழுத்தாக மாறுவது ஆகும்.

அ) இயல்புப் புணர்ச்சி ஆ) தோன்றல் விகாரம் இ) திரிதல் விகாரம் ஈ) கெடுதல் விகாரம்

12. மக்களின் ஒழுக்கத்துடன் தொடர்புடையது .

அ) வானம் ஆ) கடல்

இ) மழை ஈ) கதிரவன்

13. நம்பர்க்கு + அங்கு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .

அ) நம்பரங்கு ஆ) நம்மார்க்கு

இ) நம்பர்க்கங்கு ஈ) நம்பங்கு

14. "யாணர்" என்ற சொல்லின் பொருள் யாது?

அ) யானை ஆ) உறவினர்

இ) புது வருவாய் ஈ) ஓசை

15. காலம் கரந்த பெயரெச்சத்தைத் தேர்ந்தெடுக்க.

அ) வெண்ணிலவு ஆ) படம் பார்

இ) வளர்தமிழ் ஈ) மலர்விழி

**II. பொரொருத்துக.** (4 x 1=4)

16. இயற்கை ஓவியம் - சிந்தாமணி

17. இயற்கைத் தவம் - பெரியபுராணம்

18. இயற்கைப் பரிணாமம் - பத்துப்பாட்டு

19. இயற்கை அன்பு – கம்பராமாயணம்

**III. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை தருக.** (6 x 2=12)

20. சான்றோர்க்கு அழகாவது எது?

Padasalai.Net

21. தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?

22. ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?

23. நடைமுறையிலுள்ள மருத்துவமுறைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

24. இருண்ட ஆட்சி என மீரா எதனைக் குறிப்பிடுகிறார்?

25. நீலகேசியில் பிறவித்துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன யாவை?

26. மனிதர்களின் பொது இயல்பாகக் கன்னிப்பாவை நூல் கூறுவது யாது?

27. அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை?

**IV. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை தருக.** (6 x 2=12)

28. பின்வரும் வினாக்களைப் படித்து, இருவினாக்களுக்கு ஒரு விடை தருக.

குழம்பும் கூட்டும் மணப்பது ஏன்? குருதி மிகுதியாய்க் கொட்டுவது ஏன்?

29. தொடரிலுள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.

முதியவர் ஒருவர் தனது கால்களில் செருப்பில்லாமல் தன்னால் இழுக்க முடியாத வண்டியை இழுத்துச் சென்றார். அதனைக் கண்ட கிருஷ்ணா தம்முடைய சித்தப்பாவிடம் அவருடைய காலணிகளைக் கொடுக்குமாறு கூறினாள். அவரிடம் விலையுயர்ந்த காலணிகள் தான் இருந்தன. எனவே, தனது வேறு காலணிகளைப் பிறகு தருவதாகச் சித்தப்பா கூறினார்.

30. கலைச்சொல் எழுதுக அ. Drum ஆ. Rite

31. இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக.

முத்து நன்கு படித்தான். முத்து வாழ்வில் உயர்ந்ததான்.

32. முற்றெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.

33. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

34. சந்திப்பிழை என்றால் என்ன?

35. மக்களைப் பாதிக்கும் இயற்கைச் சீற்றங்களைப் பட்டியலிடுக.

Padasalai.Net

**V. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** (2 x 3=6)

36. கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?

37. அரசன் தண்டிக்கும் முறை யாது?

38. கலிங்கத்துப்பரணி – குறிப்பு வரைக.

**VI. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** (2 x 3=6)

39. உரைப்பத்தியைப் படித்து, வினாக்களுக்கு விடையளிக்க.

பிரம்பு என்பது கொடிவகையைச் சேர்ந்த தாவரம். இதன் தாவரவியல் பெயர் கலாமஸ் ரொடாங் (Calamus Rotang) என்பதாகும். இது நீர்நிறைந்த வாய்க்கால் வரப்புகளிலும், மண்குகைகளிலும் செழித்து வளரும். தமிழகத்தில் இப்போது இஃது அருகிவிட்டது. நமது தேவைக்காக அசாம், அந்தமான், மலேசியா ஆகிய இடங்களிலிருந்து தருவிக்கப்படுகிறது.

அ. பிரம்பு என்பது எவ்வகைத் தாவரம்?

ஆ. பிரம்பின் தாவரவியல் பெயர் யாது?

இ. பிரம்பு எங்கெல்லாம் வளரும்?

40. நோய்கள் பெருகக் காரணம் என்ன?

41. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.

**VII. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** (2 x 3=6)

42. ழகர, லகர, ளகர மெய்களின் முயற்சிப் பிறப்பு பற்றி எழுதுக.

43. தொகைநிலைத் தொடர் வகைகளை விளக்குக.

44. வேற்றுமை அணி என்றால் என்ன?

Padasalai.Net

***VIII. அடிபிறழாமல் எழுதுக.*** **(2 + 3=5)**

*45. “சொல்லுக” எனத் தொடங்கும் குறளை அடிமாறாமல் எழுதுக.*
*46. அ. “கற்றோர்க்கு” எனத் தொடங்கும் குமரகுருபரர் பாடலை அடிமாறாமல் எழுதுக.*

*(அல்லது)*

*ஆ. “வாழ்க நிரந்தரம்” எனத் தொடங்கும் பாரதியார் பாடலை அடிமாறாமல் எழுதுக.*

***IX. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*** **(3 x 6=18)**

*47. அ . விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.*

*(அல்லது)*

*ஆ. உமது பகுதியில் ஏற்பட்டுள்ள சாலைப்பழுதைச் சரிசெய்து தருமாறு நகராட்சித் தலைவருக்கு விண்ணப்பம் எழுதுக.*
*48. அ. கல்வியின் பயன்களாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.*

*(அல்லது)*

*ஆ. பாகுபாடில்லாத சமூகம் உருவாக நமது கடமைகளாக நீங்கள் கருதுவன யாவை?*

*49. அ. எம்.ஜி.ஆரின் பண்புநலன்களை விளக்கி எழுதுக.*

*(அல்லது)*

*ஆ. தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளை விளக்கி எழுதுக.*

***X. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*** **(2 x 8=16)** *50. அ. திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.*

*(அல்லது)*

*ஆ. காற்றுக் கருவிகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.*
*51. அ. ”நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு” என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.*

*(அல்லது)*

*ஆ. ”நான் விரும்பும் கவிஞர்” என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.*

Padasalai.Net